பாடம் 9

# சரியான தேர்வு

*சாராவும் அவள் தோழிகளும் திருமுழுக்குப் பெறத் தீர்மானித்தார்கள். பரலோகச் சேனை சூழ அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர். வெகு காலத்திற்கு முன்னர் இயேசு ஞானஸ்நானம் பெற்றது குறித்துப் பார்ப்போமா?*

'மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்று யோவான் ஸ்நானன் மிகவும் வல்லமையாகப் பிரசங்கம்பண்ணினார். வனாந்தரத்திலே மிகவும் வல்லமையாகப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தார்.

யோவான் ஸ்நானனின் எளிமையான உடையும், எளிமையான வாழ்வும் மக்களின் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மேலும் எவருக்கும் எதற்கும் அஞ்சாமல் அவரவர் பாவங்களை யோவான் சுட்டிக்காட்டினார். தேவனின் அன்பைக் குறித்து மிகமிக வல்லமையாகவும் அருமையாகவும் பிரசங்கங்கள் பண்ணினார்.

யோவான் ஸ்நானனும் தன் பெற்றோரைப் போலவே தேவனுக்குப் பிரியமாக வாழ்ந்தார். எலியாவைப் போன்று அஞ்சாமல் தைரியமாக மக்களுக்குப் பிரசங்கித்தார். மக்களது தவறுகளை தைரியமாகச் சுட்டிக்காட்டினார்.

எனவே, போர்ச்சேவகர்களும், ஆயக்காரர்களும்கூட யோவான் ஸ்நானனிடம் வந்தார்கள்.

"போதகரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டார்கள். யோவானும் அவர்களுக்கு தேவ ஆலோசனையைக் கூறினார்.

போர்ச்சேவகரிடம், "ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமல் இருங்கள்; பொய்க் குற்றம் சாட்டாதிருங்கள்; உங்களுக்குக் கிடைக்கும் சம்பளமே போதுமென்று இருங்கள்" என்று சொன்னார்.



**மனன வசனம்**
**இவர் என்னுடைய நேசகுமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன்.**
**மத்தேயு 3:17.**

ஆயக்காரரிடம், ‘‘உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள்’’ என்று சொன்னார்.

அதுவுமின்றி இயேசுவின் அன்பைக்குறித்தும், இயேசுவின் மேலான தியாகம், நமக்கு அவர்மூலம் கிடைக்க இருக்கும் இரட்சிப்பைக்குறித்தும் சிறப்பாகப் பேசினார்.

தங்கள் பாவங்களை உணர்ந்த மக்கள் தேவனிடம் பாவங்களை அறிக்கையிட்டனர். யோர்தான் நதியிலே யோவான் ஸ்நானனிடம் மக்கள் (ஞானஸ்நானம்) திருமுழுக்குப் பெற்றார்கள்.



ஒருநாள் இயேசு அங்கே வந்தார். யோவானிடம் ஞானஸ்நானம் பெற இருந்தார். இயேசுவைப்பற்றி அறிந்த யோவானுக்கு, இயேசுவுக்கு எப்படி ஞானஸ்நானம் கொடுப்பது என்று தயக்கமாக இருந்தது.

யோவான், ‘‘உம்மாலே நான் ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?’’ என்று இயேசுவிடம் கேட்டார்.

ஆனால், இயேசுவோ, ‘‘இப்போது நீ எனக்கு ஞானஸ்நானம் கொடு; இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது’’ என்று யோவானிடம் கூறினார்.

பின்னர் இயேசு யோர்தானின் நதியிலே யோவானின் மூலம் ஞானஸ்நானம் பெற்றார். (ஞானஸ்நானம்) திருமுழுக்குப் பெற்ற பின்னர் இயேசு கரையேறினார்.

அப்போது, வானம் திறக்கப்பட்டது. தேவ ஆவியானவர் புறாவைப்போல மெதுவாக இறங்கிவந்தார். இயேசுவின் மேலே அமர்ந்தார்.

அப்போது, ‘‘ இவர் என்னுடைய நேசகுமாரன்; இவரில்

## செய்தி

**திருமுழுக்குப் பெற நான் முடிவுசெய்யும்போது நான் தேவனுடைய குடும்பத்தவன் என்று பிறர்க்குச் சொல்கிறேன்.**

பிரியமாயிருக்கிறேன்'' என்று வானிலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

இயேசுவின் திருமுழுக்கையும், அதன்பின் சம்பவித்ததையும் கண்ட மக்கள் ஆச்சரியம் அடைந்தார்கள்.

தேவனாகிய இயேசு, பாவமற்றவராகிய இயேசு திருமுழுக்குப் பெறவேண்டிய அவசியமே இல்லை.

ஆனாலும், பாவமற்ற இயேசு நமக்கு ஒரு சிறந்த முன் மாதிரியாக இருப்பதற்காகவே திருமுழுக்குப் பெற்றார்.

என் பிரியமே! நீயும் ஏற்ற வேளை வரும்போது இயேசுவைப்போல திருமுழுக்குப் பெறு.

திருமுழுக்கின்மூலமாக நாம் இப்படி ஓர் உடன்படிக்கையைச் செய்யும்போது தேவன் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்.

**செய்முறை: இன்றைய பாடத்தை நன்குப்படி; பின்னர் கீழ்க்காணும் கேள்விகளுக்குப் பதில் எழுது.**

1. பாவமற்ற இயேசு நமக்கு முன்மாதிரியாக என்ன செய்தார்?

______________________________

2. இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தவர் யார்?

______________________________

3. எளிய உடையணிந்து வல்லமையாகப் பிரசங்கம் பண்ணியவர் யார்?

______________________________

4. இயேசு ஞானஸ்நானம் பெற்ற பின் நடந்தது என்ன?

______________________________

5. வானத்திலிருந்து என்ன சத்தம் உண்டாயிற்று?

______________________________